بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 08/04/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## அருளுக்குரிய ரமலான் மாதத்தை முன்னிட்டு துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் தத்துவம் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்கள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

وَ اِذَا سَاَلَکَ عِبَادِیۡ عَنِّیۡ فَاِنِّیۡ قَرِیۡبٌ ؕ اُجِیۡبُ دَعۡوَۃَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلۡیَسۡتَجِیۡبُوۡا لِیۡ وَ لۡیُؤۡمِنُوۡا بِیۡ لَعَلَّہُمۡ یَرۡشُدُوۡنَ ﴿۱۸۷﴾

இந்த அருளுக்குரிய வசனத்தின் பொருள்:

என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் (அவர்களுக்கு) அருகில் இருக்கின்றேன்; பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்ற போது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் எனது கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள். (அதிகாரம் அல் பகரா: 187)

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அல்லாஹ்வின் அருளால் நாம் ரமலான் மாதத்தை கடந்து கொண்டிருக்கின்றோம். இந்த மாதமானது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் மாதமாகும். அல்லாஹுத்தஆலா இந்த மாதத்தில் சிறப்பான அருளின் ஊற்றை பெருக்கெடுத்து ஓடச் செய்திருக்கிறான். இம்மாதத்தில் மனிதன் தனது எல்லா செயல்களையும் அல்லாஹ்வின் அருளைப் பெற வேண்டியே செய்கின்றான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:- அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்: இந்த மாதத்தில் சொர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்றன. ஷைத்தான் பிணைக்கப்படுகின்றான். சாதாரண நிலைமைகளிலோ ஷைத்தானுக்கு முழு சுதந்திரம் இருக்கின்றது. ஆனால் ரமலான் மாதத்தில் அவன் கட்டப்பட்டு விடுகின்றான். மேலும் இறைவன் தனக்காக நோன்பு வைப்பவர்களை முழுவதுமாகத் தன்னுடைய பாதுகாப்பின் அரவணைப்பில் ஏற்றுக் கொள்கின்றான். அல்லாஹுத்தஆலா, 'நோன்பாளிக்கான நற்கூலியாக நானே ஆகி விடுகின்றேன்' என்று கூறுகின்றான். இது எவ்வளவு பெரிய நற்செய்தி!

நான் ஓதிய இந்த வசனம், ரமலான் கடமையாக்கப்பட்டது பற்றியும், அதன் முக்கியத்துவம், கட்டளைகள் மற்றும் நோன்புகளின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைக்கப்படும் வசனங்களுக்கு இடையே வருகின்ற வசனமாகும். இதில் இறைவன் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் வழிமுறையைப் பற்றி கூறியிருக்கிறான். ரஹ்மானின் அடியார்களைப் பற்றி அல்லது ரஹ்மானின் அடியார்களாக ஆக விரும்புகின்ற மக்களைப் பற்றிக் கூறுகின்றான். அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:

கலக்கம் அடையாதீர்கள். நான் உங்களுக்கு அருகிலேயே இருக்கின்றேன். எனது அனைத்து பண்புகள் மீதும் முழுமையான நம்பிக்கையும் ஈமானும் கொள்ளுங்கள். பிறகு, துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் காட்சிகளை எவ்வாறு நீங்கள் காண்கிறீர்கள் என்று பாருங்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** வல்லமை படைத்த அல்லாஹ் தனது படைப்பினங்களின் நன்மைகளுக்காக திறந்திருக்கின்ற கதவு, இந்த துஆ ஒன்றேயாகும். ஒருவர் அழுது மன்றாடியவாறு இந்தக் கதவுகளில் நுழையும் போது, கண்ணியம் படைத்த அந்த இறைவன் அவன் மீது தூய்மை மற்றும் பரிசுத்தத்தின் போர்வையைப் போர்த்துகின்றான்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு எப்படிப்பட்ட நிலையை உருவாக்குவது அவசியமாகும்? இதுகுறித்து **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** எவரொருவர் நற்செயல்களை செய்வதில்லையோ அவர் துஆ செய்வதில்லை. மாறாக, இறைவனை சோதிக்கிறார்கள். எனவே, துஆ செய்வதற்கு முன்பாகத் தனது எல்லாவித ஆற்றல்களையும் செலவிட வேண்டியது அவசியமாகும். இந்தக் கருத்தையும் இறைவன் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். அவன் கூறுகிறான்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا ؕ

அதாவது, எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சி செய்கின்றார்களோ நாம் நிச்சயமாக அவர்களுக்கு எமது வழிகளைக் காண்பிக்கின்றோம். (திருக்குர்ஆன் 29:70) எனவே ரமலான் மாதம் ஆனது, குறிப்பாக இந்தப் போராட்டத்தின் (ஜிஹாதின்) மாதமாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** மிகவும் அலட்சியத்துடன் சோம்பலாக இருக்கின்ற ஒருவர், எவ்வாறு ஒட்டுமொத்த அறிவு, முழு ஆற்றல் மற்றும் முழுவதுமான உளத்தூய்மையுடன் இறைவனைத் தேடுகின்றவர் பெறுவது போன்றே இறை அருள்களிலிருந்து பலன் பெறுவார்? எனவே துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும், முதலில் தமது நிலைகளை மாற்றி இறைவனை நோக்கி அடி எடுத்து வைப்பது அவசியமாகும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- இறைவன் கூறுகின்றான்: 'அடியான் என்னை நோக்கி ஓர் அடி நடந்து வந்தால், நான் அவனை நோக்கி ஓடிச் செல்கிறேன்.' ஆக இறைவனோ நம் மீது இந்த அளவு கருணை புரிபவனாக இருக்கின்றான். ஆனால் உளத்தூய்மையும் நன்றியுணர்வும் நிபந்தனையாக இருக்கின்றது. ரமலானில் மட்டும் நாங்கள் தொழுகைகளைத் தொழுவோம்; இறைவனது கட்டளைகள் மற்றும் அடியார்களது உரிமைகளை செலுத்துவோம் என்று வாதித்து விட்டு, ரமலான் கடந்த பிறகு இறைவனையும் அவனது கட்டளைகளையும் மறந்துவிடக்கூடாது. நம்மீது பௌதீகம் மேலோங்கி விடக்கூடாது. பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனையை தான் கேட்பதாக இறைவன் கூறியிருக்கின்றானே! ஆனால், என்னுடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லையே என்று இறைவன் மீது குற்றம் சுமத்த கூடாது. அல்லாஹுத்தஆலாவோ எல்லா நேரமும் தனது அடியானை அன்பின் அரவணைப்பில் எடுத்துக் கொள்ள முயற்சி செய்கின்றான். அவனுக்கு தனது அடியார் தன்னை நோக்கி வருவதால், ஒரு தாய்க்குத் தனது தொலைந்த குழந்தை கிடைக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை விட அதிகம், அல்லது ஒரு பயணிக்குப் பாலைவனத்தில் தொலைந்து போன, அத்தியாவசிய சுமைகள் சுமத்தப்பட்ட தனது ஒட்டகம் கிடைத்த மகிழ்ச்சியை விட அதிகம் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

எனவே நாம் அந்த அருள்களிலிருந்து பங்கு பெறுபவர்களாக ஆவதற்கும், அல்லாஹுத்தஆலாவின் திருப்தியைப் பெறுவதற்காக மேற்கொள்கின்ற ஜிஹாதை (போராட்டத்தை) ஒருபோதும் குறைய விடாமல் இருப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இது எப்படிப்பட்ட விஷயம் என்றால், இதனை அடிக்கடி கேட்டு புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, இது தொடர்பாக நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சில வழிகாட்டல்களை எடுத்து வைக்கின்றேன்.

**அன்னார் கூறுகிறார்கள்:** எவ்வாறு நமது பௌதீக வாழ்வில் எல்லா செயல்களுக்கும் ஒரு கட்டாய விளைவு ஏற்படுகின்றதோ அவ்வாறே மார்க்க விஷயத்திலும் இதே விதி செயல்படுகிறது. இறைவன் இந்த இரண்டு உதாரணங்களில் தெளிவாகக் கூறுகின்றான். எவர்கள் இறைவனைத் தேடுவதில் முழுவதுமாக முயற்சி மேற்கொள்ளும் இந்த செயலை செய்தார்களோ அவர்கள் செய்த அந்த செயலுக்கான கட்டாய பதில் நடவடிக்கையாக, நாம் அவர்களுக்கு நமது வழிகளைக் காண்பிக்கின்றோம். எவர்கள் கோணல் தன்மையை மேற்கொண்டார்களோ, மேலும் நேர்வழியில் செல்ல விரும்பவில்லையோ அவர்களின் செயலுக்கு பதில் நடவடிக்கையாக, நாம் அவர்களுடைய உள்ளங்களை கோணலாக்கி விடுவோம்.

**அன்னார் கூறுகிறார்கள்:** மனிதனது உள்ளத்தில் பல்வேறு வகையான நிலைமைகள் ஏற்படுகின்றன. இறுதியில் இறைவன் நல்ல ஆன்மாக்களின் பலவீனங்களை அகற்றி விடுகின்றான். மேலும் பரிசுத்தம் மற்றும் நன்மையின் ஆற்றலைப் பரிசாக வழங்குகின்றான். **மற்றோர் இடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:** எவரொருவர் நமது வழிகளில் ஜிஹாது (கடும் முயற்சி) செய்வாரோ அவருக்கு நமது வழிகளை காண்பிக்கின்றோம். இது வாக்குறுதி ஆகும். மறுபுறம் اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ என்ற இந்த துஆவையும் கற்றுக் கொடுத்துள்ளான். எனவே மனிதன் இதனைக் கருத்தில் கொண்டு தொழுகைகளில் உருக்கத்துடன் துஆ செய்ய வேண்டும். மேலும் அவனும் முன்னேற்றம் மற்றும் அகப்பார்வையைப் பெற்ற மக்களைச் சேர்ந்தவனாகி விட வேண்டும் என்ற விருப்பம் கொள்ள வேண்டும்.

ஒருவர் காதியானின் ஒரு சம்பவத்தைப் பற்றிக் கூறியுள்ளார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஒரு சஹாபி மஸ்ஜித் முபாரக்கின் ஒரு மூலையில் நின்று தொழுகையில் மிகவும் உருக்கத்துடனும் அச்சத்துடனும் கையைக் கட்டி துஆ செய்து கொண்டிருந்தார். கூர்ந்து கேட்டபோது, மீண்டும் மீண்டும் اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ என்ற வாக்கியத்தைக் கூறி வந்தார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** உலகில் எந்த அளவுக்கு வியாபாரங்கள் இருந்தாலும் அனைத்திலும் முதலில் மனிதன் ஏதாவது செய்ய வேண்டியுள்ளது. அவன் கை கால்களை அசைக்கும் போது அல்லாஹுத்தஆலாவும் அருளை வழங்குகிறான். அவ்வாறே இறை வழியிலும் கடின முயற்சி செய்கின்ற மக்களே மேன்மை அடைகிறார்கள். **அன்னார் கூறுகிறார்கள்:** அல்லாஹுத்தஆலாவை அடைவதற்கு கடின உழைப்பின் அவசியம் உள்ளது. விதைக்கப்படும் விதை முயற்சி மற்றும் நீர்ப்பாய்ச்சல் இன்றி எவ்வாறு அருளற்று இருக்கின்றதோ, தானும் அழிந்து விடுகின்றதோ அதேபோன்று நீங்களும் 'இறைவா! எங்களுக்கு உதவுவாயாக!' என்று தினசரி நினைவு கூரவில்லை என்றால், துஆக்கள் கேட்கவில்லை என்றால் இறை அருளும் இருக்காது.

**அன்னார் கூறுகிறார்கள்:** وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا ؕ என்ற வசனத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதாவது, அவர் பொறுப்பில் இருக்கின்ற முயற்சியின் உரிமையை நிறைவேற்றவேண்டும். அவ்வாறல்லாமல் 20 அடி தோண்டினால் தண்ணீர் வெளிவரும் என்று இருக்கையில் இரண்டு அடி மட்டுமே தோண்டிவிட்டு மனம் தளர்ந்து விடக்கூடாது... மக்கள் உலக கவலைகளில் வேதனைகளை தாங்கிக் கொள்கிறார்கள். எதுவரை என்றால், சிலர் அதிலேயே அழிந்தும் விடுகிறார்கள். ஆனால், அல்லாஹ்வுக்காக ஒரு முள்ளின் வேதனையைக் கூட தாங்கிக் கொள்ள விரும்புவதில்லை.

**அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:** எமது வழிகளில் முயற்சி செய்பவர்கள் வழிதனை அடைகிறார்கள். இதன் பொருளாவது, அவனது வழியில் தூதருடன் இணைந்து கடின முயற்சி செய்ய வேண்டும். ஓரிரு மணி நேரங்களுக்குப் பிறகு ஓடிவிடுவது போராளியின் பணி அல்ல.

**பிறகு, தவ்பா மற்றும் இஸ்திக்ஃபாரின் பக்கம் கவனம் ஊட்டியவாறு அன்னார் கூறுகிறார்கள்:** தவ்பா மற்றும் இஸ்திக்ஃபாரானது அல்லாஹ்வை அடைவதற்கான வழிமுறையாக இருக்கிறது. சஹாபாக்களின் வாழ்க்கையைப் பாருங்கள். அவர்கள் சாதாரண தொழுகைகளால் மட்டுமே அந்த அந்தஸ்தைப் பெற்று வந்தார்களா? இல்லை! மாறாக, அவர்கள் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காகத் தங்களது உயிர்களையும் பொருட்படுத்தவில்லை. ஆடுமாடுகளைப் போன்று அர்ப்பணமாகினர். அதற்குப் பிறகுதான் அவர்களுக்கு இந்த அந்தஸ்து கிடைத்தது.

நினைவில் கொள்ளுங்கள்! துஆ ஒரு மரணமாகும். எவ்வாறு மரணத்தின்போது ஒரு நிம்மதி இன்மையும் பரிதவிப்பும் இருக்கின்றதோ அவ்வாறே துஆவுக்காகவும் அதேபோன்ற நிம்மதியின்மையும் உத்வேகமும் இருக்க வேண்டியது அவசியமாகும்... இதனையும் நினைவில் கொள்ளுங்கள்! அனைத்தையும் விட முதலாக, அனைத்து துஆக்களிலும் அசலான மற்றும் மிக முக்கியமான துஆ யாதெனில், மனிதன் தன்னைப் பாவங்களிலிருந்து தூய்மைப்படுத்த துஆ கேட்க வேண்டும். இந்த துஆ ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டால், மனிதன் எல்லா விதமான அசுத்தங்கள் மற்றும் தீமைகளிலிருந்து தூய்மை அடைந்து இறைவனின் பார்வையில் பரிசுத்தமானவன் ஆக ஆகிவிடும் போது, பிறகு மனிதனுடைய பிற உலக தேவைகளுக்காகக் கேட்கப்படுகின்ற மற்ற துஆக்களை அவன் வேண்டுவதற்குக்கூட அவசியம் இருப்பதில்லை. அவைத் தாமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டு விடுகின்றன. மிகவும் கடினமான மற்றும் உழைப்பை நாடும் துஆ, அவன் பாவங்களை விட்டும் தூய்மையாகி விட வேண்டும் என்பதாகும்...... துஆவும் ஒரு கடின முயற்சியை நாடுகிறது. எவரொருவர் துஆவைப் பொருட்படுத்துவதில்லையோ, அதிலிருந்து விலகி இருக்கிறாரோ இறைவனும் அவரைப் பொருட்படுத்துவதில்லை; அவரை விட்டும் தூரம் சென்று விடுகிறான். அவசரமும் விரைவுபடுத்துவதும் இங்கு பலன் தருவதில்லை. அல்லாஹுத்தஆலா நமக்கு இந்த விஷயங்களை செயல்படுத்தும் நல் வாய்ப்பினை வழங்குவானாக! இந்த ரமலானை நமக்காக இறைவனுடனான உறுதியான தொடர்பை ஏற்படத்தக்கூடியதாக ஆக்குவானாக!

உலகின் சூழ்நிலைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹுத்தஆலா உலகை அழிவின் செயல்களிலிருந்து பாதுகாப்பானாக! இவர்கள் தம்மைப் படைத்தவனை அறிந்து கொள்பவர்களாக ஆவதற்கு இவர்களுக்கு அறிவை வழங்குவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* **ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு, MTA உருவாக்கிய ஒரு வெப்சைட் மற்றும் மொபைல் அப்ளிகேஷனை நான் தொடங்கி வைப்பேன். இதில் 313 பத்ர் போர் சஹாபிகள் தொடர்பான எனது ஜுமுஆ பேருரைகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இந்த வெப்சைட்டில், பத்ரி ஸஹாபிகள் பற்றித் தயாரிக்கப்பட்டுள்ள ப்ரோஃபைல்லை வாசகர்கள் படிக்க முடியும். அனைத்து சஹாபிகள் தொடர்பான கேள்வி பதிலுக்கான ஒரு வினாடி வினாவும் உள்ளது. இதே போன்று பயனுள்ள வரைபடங்கள் மற்றும் கடினமான சொற்கள், பெயர்களின் அரபு உச்சரிப்பையும் கேட்க முடியும்.**

**அல்லாஹுத்தஆலா இந்த வெப்சைட்டை மக்களுக்கு பயனுள்ளதாக ஆக்குவானாக! ஆமீன்!**

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلاَ هَادِىَ لَهُ وَنَشْهَدُ أَنْ لَآ اِلٰهَ اِلاَّ اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி சுல்தான் மைதீன்)**